முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 998

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.06.2022, வியாழக்கிழமை

1. ஞான சித்தியே அரங்கா வாழ்க
ஞான கீர்த்தியே தேசிகா வாழ்க
தான தர்மத்தின் பலமே வாழ்கவாழ்க
தவசியாய் எந்தன் சக்தியாய் வந்த அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 09 நாள், 23.06.2022 வியாழக்கிழமை)
ஊழ்போக்கி உலகோர் நலம்காண
உண்மைஞானம் அருளுகின்ற அரங்கா நீ
3. அரங்கனே எந்தன் மகா அவதாரம்
ஆற்றல்மிக்க உன் அவதாரத்தின் மூலமே
ஜெகத்தை ஆறுமுகன் யான் மாற்றுவேன்
சித்திமிகு ஞானயுகமாக ஆற்றல்கூட்டி
4. கூட்டியே உலகோரை எல்லாம் உன் வழி
குறையின்றி வந்து குருஞானம் தேறி
தேறியே உலகமக்களெல்லாம்
தெய்வநெறி என்கின்ற சன்மார்க்கத்தை
5. ஆறுதலாக பற்றி அவரவரும்
அழியாமை பெற அருள்புரிவேன்
அருளாக உலகின் மகா சூட்சுமமாக
அறமாக உலகத்தை காக்கும் மகா சக்தியாக
6. வரம்கூட்டி அரங்கா உந்தனுக்கு நித்தம்நித்தம்
வல்லமைபட வடிவேலன் யான் அருள்புரிவேன்
அருளாக நீ செய்யும் அனைத்து சேவைகளும்
ஆறுமுகன் யான் தலைமை ஏற்றுச்செய்யும் சேவையாகும்
7. வரமாக நீ தருகின்ற தீட்சையாவும்
வடிவேலன் உலகோர்க்கு உன்வழி தரும் தீட்சையாகும்
ஆகவே உன்பதம் பற்றியோர்க்கு
ஆறுமுகன் என் அருளும் தயவும் பரிபூரணமாக நின்று
8. நின்றுமே சுப்ரமண்யர் ஞானத்தை நிலவுலகம் எங்கும் அற்புதம் பட
நன்றுபெற உமைகொண்டோ தொண்டர்களைகொண்டோ
ஞான யுகமாற்றமாக யான் நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–